






# ஞானச்சாரியார்
# ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
# அவர்களின் எழுத்துக்கள்

## மார்கழி மாத வெளியீடு

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த**

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,111**

### உள்ளுறை

1. மார்கழி மாதம் பீட மாதம், சிறப்பான மாதம் என்பதற்கான விளக்கம்.
2. இந்துவேதத்தில் தை மாதத்தின் சிறப்புக்கள்.
3. பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களின் அரசபாரம்பரியம்

வட ஆரியர்கள் அரசர்களிடம் செல்வாக்குப் பெறப் பயன்படுத்திய மறைமுக, அந்தரங்க வழிமுறைகள் பற்றிய விளக்கம்.

4. சில அரிய சித்தர் நெறித் தத்துவங்கள் - மற்ற 48 வகைச் சித்தர்களின் நூல்களில் காணப்படாதவை.
5. குருதேவர் விடுத்த ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக் கவிதை.

---

### ஓர் அறிவிப்பு

இந்த சுற்றறிக்கையைப் பெறுபவர்கள் மற்றவர்களுக்கு இதைப் படிக்கக் கொடுக்கலாம். இதைப் படித்த மற்றவர்கள் இந்த அறிக்கையைப் பெற விரும்பினால் அவர்களின் முகவரியை எங்களிடம் பதிவு செய்து கொள்ளலாம். எங்களது முகவரியும் தொலைபேசித் தொடர்பு எண்ணும் கடைசி பக்கத்தில் உள்ளன.

அன்னிய நாகரிகத்தின் தாக்குதலாலும், பொய்யான ஹிந்துமதத்தின் ஆதிக்கத்தாலும் ... பிற காரணங்களாலும் இந்த அறிக்கையை மேலும் பெற விரும்பாவிட்டால் அதையும் எங்களுக்குத் தெரியப்படுத்தலாம்.

*- சித்தரடியான்கள் குழுமம்*

# மார்கழி மாதம் பீடை மாதம் என்பது சரியா?

**பதில்:-** மெய்யான இந்துமதத்திற்கும் பொய்யான ஹிந்துமதத்திற்கும் இடையேயுள்ள வரலாற்று வேறுபாடுகளையும், தத்துவ சித்தாந்த புராண இதிகாச பழக்க வழக்க சடங்கியல்..... வேறுபாடுகள், மாறுபாடுகள் முதலிய அனைத்தையும் விளக்கி யுரைக்கும் பணி துவக்கப் பட்டு இருப்பதே இந்து மதத்தையும், இந்துமத மூலவர்களான தமிழர்களையும், இந்துக்களையும் காப்பாற்றுவதற்குத்தான். இந்தக் கேள்வியின் விளக்கம் இப்பணிக்கு அணி செய்யும்.

ஆண்டுக்குரிய 12 மாதங்களையும், வாரத்துக்குரிய ஏழு (7) நாட்களையும் அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை மீண்டும் ஆண்டுகளின் பெயர் துவக்கத்திலிருந்து மீண்டும் வரும் செயல் திட்டத்தையும் வகுத்தவர்கள் இம்மண்ணுலகின் இயற்கையின் விதிகளை ஆராய்ந்த பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் ஆவார்கள். இவர்களின் கருத்துப்படி மாதங்களில் சிறந்தது மார்கழி மாதம்தான். எந்த நல்ல காரியம் துவக்க வேண்டுமென்றாலும் இந்த மார்கழியில்தான் துவக்க வேண்டும். அதாவது திருமணம், கால்கோள் விழா, குருகுலக் கல்வி, வழிபாட்டு நிலையப் பூசைகள் ..... முதலிய அனைத்தும் மார்கழி மாதத்தில்தான் செய்ய வேண்டும் என்பது மெய்யான இந்துமதத்தில் சட்டபூர்வமான அதிகாரப் பூர்வமான விதியாகும்.

"பீடு நிறைந்த மாதம் = பெருமைகள் மிகுந்த அரியன செய்தற்குரிய மாதம், வாழ்வியல் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் உகந்த மாதம். 'பீட மாதம்' = அருட்பீடம், குருபீடம், கருப்பீடம், கருமப்பீடம், திருப்பீடம்...... முதலிய பீடங்களை அமைப்பதற்குரிய குலவளர் மாதம் = அருளுலகுக்கு மிக மிகச் சிறந்த மாதம்."

அனைத்து வகையான கலை வல்லார்களும் இந்த ஒரு திங்கட்குரிய முப்பது (30) நாட்களும் அதிகாலையில் தங்களுடைய கலைகளைப் பயிற்சி செய்தால் நல்லது. அவர்கள் ஆண்டு முழுதுமுள்ள 11 மாதங்களில் பயிற்சி செய்யாவிட்டாலும் பாதகமில்லை..... என்று இப்படிக் குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், குருபாரம்பரியம் முதலியவை தெளிவாகக் கூறுகின்றன. எனவே, மார்கழி மாதத்தைப் பீட மாதமென்று வெறுத்து ஒதுக்கும் கருத்தையும், பழக்கத்தையும் புகுத்தியவர்கள் பிற மண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வட ஆரியர்களே. அதாவது இந்த வட ஆரியர்கள் மெய்யான இந்து மதத்தையும், இந்து மத மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்களையும் அருள் அற்றவர்களாக, ஆற்றலற்றவர்களாக முறையான பயிற்சியும் தேர்ச்சியும் பெற முடியாதவர்களாகச் செய்வதற்காகத்தான் பொய்யான ஹிந்து மதத்தின் மூலம் மார்கழி மாதத்தை வெறுத்து ஒதுக்கச் செய்தார்கள். இதனைப் புரிந்து நம்மவர்கள் இனிமேலாவது மார்கழி மாதத்தை சிறப்பாகக் பயன்படுத்த வேண்டும்..

-------------------------------------------

# தை மாதத்தின் சிறப்புக்கள்

### அல்லது

## இந்துவேதத்தில் தை மாதத்தின் சிறப்புக்கள்

02-10-1995

1. பொதுவாக நாட்டு வழக்கில்; "தை பிறந்தால் வழி பிறக்கும்" - என்ற பழமொழி, என்ற மூதுரை எல்லோரும் அறிந்த ஒன்றாகவே இருக்கிறது. ஆனால், இதில் எவ்வளவு செய்திகள் அடங்கியிருக்கின்றன என்பது யாருக்கும் தெரியாது.

2. இந்த மண்ணுலகத்தைப் பொறுத்தவரை;

கோடிக்கணக்கான ஆண்டுகள் வெப்பம் மிக்க அனல் காற்றுக் கோளமாக இருந்தது இவ்வுலகம்.

அதன்பிறகே கோடிக்கணக்கான ஆண்டுகள் இவ்வுலகம் நெருப்புக்கனல் கோளமாக இருந்தது.

அதன்பிறகே, கோடிக்கணக்கான ஆண்டுகள் பனிக்கட்டிக் கோளமாக மாறிற்று.

அதையடுத்து கோடிக்கணக்கான ஆண்டுகள் இந்த உலகம் பனிமலையும், தண்ணீரும் கலந்த மிகப்பெரிய அளவில் தண்ணீர் பகுதி நிறைந்த யாராலும் எளிதில் கடக்க முடியாத கடல் கோளமாக இருந்தது.

அதன்பிறகே கோடிக்கணக்கான ஆண்டுக்கால இடைவெளியில் தண்ணீருக்குள்ளிருந்து பெரிய பெரிய கல் மலைகள் தோன்றின. அப்படிக் கல்மலைகள் தோன்ற ஆரம்பித்த பொழுதுதான், அண்ட பேரண்டங்களிலிருந்து அண்ட பேரண்டங்களை ஆளும் மூலப் பதினெண் சித்தர்களும், மூலப் பதினெட்டாம்படிக் கருப்புக்களும், அவர்களுடைய அருளாட்சி குழுவின் அங்கத்தினர்களும் இம்மண்ணுலகுக்கு வந்து சேர்ந்தார்கள்.

3. இப்படி அண்டபேரண்டங்களிலிருந்து வந்தவர்கள் இம்மண்ணுலகில் தண்ணீருக்குள்ளிருந்து வெளியே தோன்றிக் கொண்டிருந்திட்ட கற்பாறைகள் மீது தங்கி இம்மண்ணுலகைப் பற்றி ஆய்வுகள் நிகழ்த்தினார்கள். அப்பொழுது, அவர்கள் தங்களுடைய தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியும்; அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியுமான முத்தமிழ் மொழியிலேயே உரையாடினார்கள்; தங்களது நூல்களை எழுதினார்கள். இம்மண்ணுலகின் தோற்ற மாற்ற ஏற்ற இறக்க ... நிலைகள் அனைத்தையும் குறித்திட்டார்கள். எனவேதான்,

***"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த தமிழ்மொழி, தமிழ்க்குடி"***
என்ற வாக்குப் பிறந்தது.

இதனுடைய பொருள் ஆழமானது, செறிவு மிக்கது, உலக வரலாற்று பேருண்மைகளுக்கு அடிப்படையானது. அதாவது, இவ்வுலகத்தைப் பொறுத்தவரை முதன்முதல் தோன்றிய நிலப்பகுதி என்பது விந்திய மலைக்கு தெற்கே இன்றைய இந்துமாக்கடல் இருக்கின்ற பகுதியிலேயே ஏழாயிரம் கல் தொலைவுக்கு நீண்டு விரிந்து கிடந்த ஒரே பெரிய நிலப்பரப்புத்தான் 'இளமுறியாக் கண்டம்' எனப்படும் 'குமரிக்கண்டம்'. இங்குத் தோன்றிய மக்கள்தான் இவ்வுலகின் பூர்வீகக் குடிகள். இங்குத் தோன்றிய உயிரினங்களும், பயிரினங்களும்தான் இந்த உலகம் முழுவதற்கும் பரவின என்பதால் இளமுறியாக் கண்டத்தின் உயிரினங்களும், பயிரினங்களும்தான் இவ்வுலகின் பூர்வீகமானது. எனவேதான், இன்றைக்கும் தென் இந்தியாவில்; குறிப்பாக தமிழ்நாட்டில் எல்லா வகையான பயிரினங்களும், உயிரினங்களும் இருக்கின்றன. மனிதரிலும் இவ்வுலகம் முழுவதுமுள்ள எல்லா நாட்டவர்களையும் போன்ற வடிவமைப்பும், வண்ண அமைப்பும், தோற்றப் பொலிவும், வாழ்வியல் நோக்குகளும், போக்குகளும் உடைய மனிதர்கள் தமிழ்நாட்டுக்குள் மட்டுமே இருக்கின்றார்கள். இதுபோல் எந்த ஒரு நாட்டிலும் இவ்வுலகம் முழுவதுமுள்ள எல்லா மானுட இனத்தின் வகைகளையும் உடைய மனிதர்கள் இருப்பதில்லை.

4. இப்படித் தமிழகத்தின் தொன்மை, மேன்மை, உண்மை, திண்மை, நுண்மை, ... முதலியவைகள் எல்லாம் விளக்கி உரைக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், நாள், கிழமை, வாரம், வாரத்தின் ஏழுநாட்கள், மாதம், ஒவ்வொரு மாதத்துக்கும் உரிய நாட்கள், ஒவ்வொரு மாதத்திற்கும் பெயர், 12 மாதம் சேர்ந்தது ஓர் ஆண்டு, ஒவ்வொரு ஆண்டுக்கும் பெயர், 60 ஆண்டுகள் சேர்ந்து இவ்வுலகின் இயக்கம், இவ்வுலகம் கடந்த வானவெளி சஞ்சாரம், முதலியவை அனைத்தும் ஒரு வட்டமாகின்றன; அதாவது முடிவு பெறுகின்றன; அதாவது முழுமை பெறுகின்றன. அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு, 61வது ஆண்டை முதல் ஆண்டாக மீண்டும் கருத முடிகின்றது. இதற்குக் காரணம் வானவெளி ஆராய்ச்சி, நிலவியல் ஆராய்ச்சி... முதலியவைகளில் இளமுறியாக் கண்டத்து மக்கள் மிகுந்த தேர்ச்சியைப் பெற்றிருந்தனர். அது மட்டுமல்ல, மக்கள் சாதாரணமாக இரண்டு அறுபது ஆண்டுகள் அல்லது மூன்று அறுபது ஆண்டுகள் காலம் என்று 120 முதல் 180 வயது வரை வாழுகிறவர்கள் அதிகமாக இருந்திட்டார்கள். அதனால் 60 ஆண்டுக்கொரு முறை நாள்நிலை, கோள்நிலை, மீன்நிலை, இராசிநிலை, இயற்கை வளம், ... முதலியவைகள் எல்லாம் திருப்பம் அடைகின்றன. அதாவது அறுபது ஆண்டுக்கொரு முறை எல்லாமே மீண்டும் பழைய நிலைக்கு வந்து விடுகின்றன என்பதுதான் இளமுறியாக் கண்டத்து மக்கள் தங்களுடைய வாழ்நாளின் சோதனைகளின் மூலம் சாதித்த சாதனைகள் ஆகும். இச்சாதனைதான் இந்து வேதமாக, இந்துமதமாகப் பூத்துக் காய்த்து கனிந்து குலுங்குகின்றன.

5. இந்துக்கள், இந்து வேதத்தவர்கள் என்றாலேயே தமிழர்கள், தமிழ் மொழியினர் என்றுதான் பொருள். அதாவது தமிழ்மொழிதான் வேதத் தமிழ், தேவத் தமிழ், தெய்வத் தமிழ், கடவுள் தமிழ், ஆண்டவர் தமிழ், ஞானத் தமிழ், தவத் தமிழ், பத்தித் தமிழ், சத்தித் தமிழ், சித்தித் தமிழ், முத்தித் தமிழ், வேள்வித்

தமிழ், யக்ஞத் தமிழ், யாகத் தமிழ், ஓமத் தமிழ், ஓகத் தமிழ், ஓகாசனத் தமிழ், யோகாசனத் தமிழ், மோகாசனத் தமிழ், போகாசனத் தமிழ், கந்தழி ஓம்பல் தமிழ், வள்ளி நிலை ஓம்பல் தமிழ், கொடிநிலை ஓம்பல் தமிழ், மணுநீதி தமிழ், ... என்று தமிழின் பெருமையை விரித்துக் கொண்டே போகலாம்.

6. இப்படித் தமிழ் பற்றி, தமிழர் பற்றி, ஆன்மீகத்தின் அடிப்படையில், அருளியலின் அடிப்படையில், அறிவியலின் அடிப்படையில்... விளக்கம் கூறக்கூடிய பல்லாயிரக் கணக்கானச் சித்தர்களை உருவாக்கிய பெருமை, உரிமை, பதினெண்சித்தர் மடத்திற்குத்தான் உண்டு. அதுவும் இன்றைக்கு நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அருளாட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் இந்துவேதக் கடலில் மூழ்கி மக்களின் தேவைக்கேற்ற; உரிய, பயன் தரக்கூடிய தத்துவ முத்துக்களைத் தேடி எடுத்து வெளிக் கொணர்ந்து மக்களுக்கு அன்பளிப்பாக, அருட்கொடையாக, நன்மருந்தாக, பெருவிருந்தாக வழங்கிக் கொண்டிருக்கிறார்! வழங்கிக் கொண்டிருக்கிறார்! வழங்கிக் கொண்டிருக்கிறார்!

7. "கொடைகளிலே சிறந்த கொடை அருட்கொடைதான்" என்று இருக்கு வேதம் காண்டம்-1, மண்டலம்-1, நாள் உரைக்கோவை வாசக மலர்-39இல் கூறப்பட்டிருக்கிறது. இதுவே அசுர (யசுர்) வேதத்திலும், அதர்வான (அதர்வண) வேதத்திலும், யாம (சாமம்) வேதத்திலும் சிறப்பாகக் குறிக்கப் படுகின்றன. அதாவது, இந்துவேதம் நான்கிலுமே "அருட்கொடை தான் கொடைகளிலேயே சிறந்தது" என்ற கருத்து [அசுர வேதம் காண்டம்-1, மண்டலம்-1, நாள் வாக்கு மலர்-39இல்; அதர்வான வேதம் காண்டம்-1, மண்டலம்-1, நாள் வாக்கிய மலர்-39இல், யாம வேதம் காண்டம்-1, மண்டலம்-1, நாள்வாசக மலர்-39இல்] மற்ற மூன்று வேதங்களிலும் இருக்கு வேதத்தைப் போலவே வலியுறுத்தப் படுகின்றன. ஆனால், இக்கருத்து விளக்கச் சொற்றொடர்கள் மட்டும்தான் வேறுபட்டிருக்குமே தவிர கருத்து ஒரே கருத்துத்தான். இதுதான் இந்து வேதங்கள் நான்கின் சிறப்பு, ஒற்றுமை, ஒருமைப்பாடு.

8. இப்பேருண்மைகளை விளக்குவதற்காகத்தான் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் இரவு பகலென்று பாடுபட்டு வருகிறார். ஏனெனில், இந்த உலகம் முழுவதுமுள்ள மக்கள் பல்வேறு வகையான வெறிகளால், ... தன்னல வெறி, மண்ணாசை வெறி, பெண்ணாசை வெறி, பொன்னாசை வெறி, பதவி வெறி, சாதி வெறி அல்லது மத வெறி, நாட்டு வெறி, இனவெறி... என்று பல்வேறு வகையான வெறிகளால் மானுட வாழ்வின் புனிதத்துவத்தையும், இனிமையையும், கனிமையையும், அருட்பயனையும் குரங்கு கைப் பூமாலை போல் சிதைத்து சின்னாபின்னப் படுத்தி விடுகிறார்கள். இந்த அவலக் கேவல இழிவு, அழிவு நிலைகளை யெல்லாம் சரிசெய்ய வேண்டுமென்றால், செப்பனிட்டு செம்மைப்படுத்த வேண்டுமென்றால்; இந்து வேதம் ஒன்றினால்தான் முடியும்! இந்துவேதம் ஒன்றினால்தான் முடியும்! இந்துவேதம் ஒன்றினால்தான் முடியும்!

9. இப்படிக் கூறுவதற்குக் காரணம்,

"இந்துவேதம் கடவுளர்களாலேயே எழுதப்பட்டது".

"இந்துவேதம் அண்டபேரண்டங்கள் அனைத்திலும் அருளாட்சி செய்கின்ற ஒன்று"

"இந்துவேதம்தான் இந்த உலகிலுள்ள எல்லா இனத்தவர்களுக்கும், இனத்தினர்களுக்கும், மொழியினர்களுக்கும், நாட்டினர்களுக்கும் பொதுவான ஒன்று என்று அறிவித்துக் கொள்கின்றது".

"இந்த இந்துவேதம்தான் எதனையும் பகுத்தறிவுப் பூர்வமாக விஞ்ஞானச் சூழலில் விளக்குகின்றது".

"இந்த இந்துவேதம்தான் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு என்று உலகியலையே நான்கு பெரும் பகுதிகளாகப் பகுத்து மிகத் தெளிவான வாழ்வியல் நெறிகளை, முறைகளை, ஒழுகலாறுகளை பண்டைய மரபு கெடாமல் பாதுகாக்கும்படி வலியுறுத்துகிறது".

"இந்து வேதம் ஒன்றுதான் மானுட ஒற்றுமை, சமாதானம், சமத்துவம், அமைதி, அன்பு, நட்பு, தோழமை, ஈவு, இரக்கம், முன்னோர்களை வழிபடல், மூத்தோர்களைப் பணிவோடும், கனிவோடும் போற்றிப் பேணிப் பாதுகாத்திடல் வேண்டும் ... முதலிய அறிவுரைகளை அருளுரைகளாக வழங்குகின்றது".

"இந்துவேதம் ஒன்றினால்தான் மனிதம், மனிதத்துவம், மானுட நேயம், மானுட ஆதரவு, மானுடப் பற்று, மானுடப் பாசம், மானுடப் பிறப்பின் அருமை, பெருமை, அரிய தண்மைகள் அல்லது பண்பு நலன்கள்... முதலியவற்றை

யெல்லாம் பாதுகாக்க முடியும்; பசுமையாக என்றென்றும் வளர்த்திட முடியும். மதமாற்றம் செய்தல், மதப்போர், சண்டை, சச்சரவு, கலகம், ஆக்கிரமிப்பு, ... முதலியவை எல்லாம் மானுடர்களுக்கிடையே முளை விடாமல் பார்த்துக் கொள்ளும் ஆற்றல் இந்துவேதத்திற்கு மட்டும்தான் இருக்கிறது".

..... ..... .....

'இந்துவேதம் ஒரு முழுமையான வேதம்' ... என்ற இந்தப் பத்துக் கருத்துக்களும் இந்துவேதம் நான்கிலுமே முதல் மண்டலத்தில், 30 முதல் 40 நாள் உரைக்கோவை வாசக மலர்களாக; நாள் வாக்கு மலர்களாக; நாள் வாக்கிய மலர்களாக, நாள் வாசக மலர்களாக இருக்கின்றன. அதாவது மேலே குறிப்பிட்ட பத்தும் இருக்கு வேதம் காண்டம்-1, மண்டலம்-1, நா.உ.கோ.வா. 30 முதல் 40; அசுர வேதம் காண்டம்-1, மண்டலம்-1, நாள் வாக்குமலர் 30-40; அதர்வான வேதம் காண்டம்-1, மண்டலம்-1, நாள் வாக்கிய மலர் 30-40; யாம வேத காண்டம்-1, மண்டலம்-1, நாள் வாசக மலர் 30-40 என்று இடம் பெற்றிருக்கின்றன.

10. அதாவது இருக்கு வேதத்தில் இருந்துதான் ஆதிசிவனாரின் மகன் முருகப் பெருமான் மற்ற மூன்று வேதங்களையும் உருவாக்கினான் என்பதால் முதன்மையான அரிய பெரிய கருத்துக்கள் எல்லாம் இருக்கு வேதத்தின் முறைப்படியே காண்டம், மண்டலம், நாள் மலர் எனும் மூன்று எண்ணிக்கைகளும் பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருக்கும்படி எழுதப்பட்டு இருக்கின்றன. இந்த உண்மை தெரியாதவர்கள்; "இருக்கு வேதத்தில் இருப்பதையே மற்ற மூன்று வேதங்களும் திருப்பித் திருப்பிக் கூறுகின்றன. எனவே, இருக்கு வேதம் ஒன்றே போதும்" என்று கூறுபவர்கள் அதிகமாகி விட்டார்கள். ஆனால், ஆதிசிவனாரே இருக்கு வேதத்தில் இருந்திட்ட அசுர வேத, அதர்வான வேத, யாம வேதக் கருத்துக்களை யெல்லாம் எல்லோரும் படிக்க இயலாத வண்ணம் குறைத்து விட்டார்; குறுக்கி சில சில வரிகளில் மேம்போக்கான கருத்துக்களை மட்டும் வெளியிட்டு இந்து வேதத்தின் அளவை மிகமிகச் சுருங்கியதாக ஆக்கி விட்டார்.

குறிப்பு:- பொருளியல் வாழ்க்கை பற்றிய செய்திகளைத்தான் மாற்றாமல் திருத்தாமல் அப்படி யப்படியே வெளியிட்டுள்ளார்.

எல்லோருக்கும் எல்லாவிதமான அருளுலகச் செய்திகளும் தெரியக் கூடாது; தெரிந்தால் மிகப்பெரிய அழிவுச் சத்திகள், அரக்கர்கள், அசுரர்கள், ... முதலியவர்கள் தோன்றி விடுகின்றனர். அதைத் தடுப்பதற்காகவே முருகப் பெருமான் அசுர சத்தி சித்திக்கு உரியவைகளை அசுர வேதமாகவும், மண்ணுலகு கடந்த வானவர் வாழ்க்கைக்குரிய சத்தி சித்திக்குரியவைகளை அதர்வான வேதமாகவும், உலகியலில் அருளாற்றல்களை ஊற்றெடுக்கச் செய்யும் சத்தி சித்திக்கு உரியவைகளை யாம வேதமாகவும் வடிவமைப்புச் செய்து மூன்றுபெரும் பிரிவுகளாகப் பிரித்திட்டார். ஆக மொத்தம் இந்து வேதங்கள் நான்கு என்று ஆயின. இந்தச் சிறப்பு இம்மண்ணுலகிலுள்ள தமிழ்மொழிக்கு மட்டுமே உண்டு. அதாவது மொத்தம் உள்ள 1359 அண்டங்களில் இம்மண்ணுலகில் மட்டும்தான் இருக்கு வேதத்தோடு சேர்த்து அசுர வேதம், அதர்வான வேதம், யாம வேதம் என்று மூன்று வேதங்கள் உருவாகியுள்ளன. இதனால், இந்து வேதங்கள் நான்கு இம்மண்ணுலகுக்குக் கிடைத்துள்ளன. இது தமிழ்மொழிக்குரிய ஈடு இணையில்லாத பெருமையாகும்.

11. முருகப் பெருமான் தன்னுடைய தந்தைக்கே அருளுரை வழங்கியதாக (தகப்பன் சாமி என்று அழைக்கப்படும் அளவிற்கு முருகன் தன் தந்தைக்கு அருளுரை கூறினார் என்பது இதுதான்) இந்து வேதங்களிலும், இந்து வேத நூல்களிலும், சிவபுராணத்திலும், சத்தி புராணத்திலும், மாயோன் புராணத்திலும், பிறமண் புராணத்திலும், முருகன் புராணத்திலும், இந்திரன் புராணத்திலும், பதினெண்சித்தர்கள் புராணங்களிலும், ஆதிசிவனாரின் குருபாரம்பரியம், அரச பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் முதலிய நூல்களிலும் மிகத் தெளிவானச் செய்திகள் கிடைக்கின்றது. எனவேதான் ஆதிசிவனாரின் இருக்கு வேதம், மேலும் மூன்று தனி வேதங்களைப் பெறுவதற்குக் காரணமாக இருந்த முருகப் பெருமானை எல்லோருமே பாராட்டிப் புகழ்ந்துள்ளனர்.

12. முருகப் பெருமான் ஐந்தரம், ஐந்திரம், ஐந்திறம் (பஞ்சாங்கம்) எனும் மூன்று கலைகளை மூன்று பெரும் விஞ்ஞானங்களாக அறிவியல்

கலைகளாக அருளார்ந்த கலைகளாக வளர்த்திட்டார். இதில் ஆதிசிவனார் இருக்கு வேதத்தில் காண்டம்-15, மண்டலம்-29, நாள் உரைக்கோவை வாசக நாள் மலர்-21இல் “ஞானம், அகஞானம், புறஞானம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என்ற ஐந்து வகைப் பட்ட அறிவியல் கலைகள் இருக்கின்றன. இவற்றில் நான்காவது அறிவியல் கலையான விஞ்ஞானம் என்பதை மட்டும் அதிக அளவில் வளர்க்கக் கூடாது. ஏனெனில், இந்த விஞ்ஞானம் ஆக்கச் சத்திகளை, ஆக்கப் பூர்வமான கொள்கைகளை, தத்துவங்களை வெளியிட்ட போதும் இந்த விஞ்ஞானத்தில் எல்லா வகைப்பட்ட போதனைகளிலும், சாதனைகளிலும், அழிவை பேரழிவை விளைவிக்கக் கூடிய கருத்துக்களும், கருவிகளும், சாதனங்களும், நூதன இயந்திரங்களும் உருவாக்கப் படுமே தவிர மனிதனுக்கு ஆக்கத்தையோ, நிறைவையோ, நிம்மதியையோ, அமைதியையோ, பொறுமையையோ, போதுமென்ற நிறை உணர்வையோ, அடுத்தவர்க்கு உதவி செய்ய வேண்டும் என்ற மனிதப் பண்பையோ, எல்லோரும் ஒன்று கூடி வாழ வேண்டும் என்ற எண்ணத்தையோ, ஒருவருக்கொருவர் உதவி செய்து தோழமையையும் நட்பையும் வளர்க்கும் போக்கையோ வளர்க்காது! வளர்க்காது! வளர்க்காது! வளர்க்கவே வளர்க்காது! அதனால் விஞ்ஞானக் கலையை மட்டும் அதிக அளவுக்கு வளர்க்கக் கூடாது. இன்னும் சொல்லப் போனால், விஞ்ஞானிகள் மானுட அழிவுக்கு வழி வகுப்பவர்களாகவே இருக்கிறார்கள், இருப்பார்கள். மேலும் விஞ்ஞானிகளின் சாதனைகள், போதனைகள் கூடுமானவரை பிறரைச் சுரண்ட, பிறரை அடிமைப்படுத்த, பிறருடைய சொத்துக்களை ஆக்கிரமிப்புச் செய்யக் கற்றுக் கொடுப்பவை - களாகத்தான் இருக்கின்றன! இருக்கின்றன! இருக்கின்றன! இருக்க முடியும்! இருக்க முடியும்! இருக்க முடியும்!

13. எனவே, எனவே, எனவே, இந்த இருக்கு வேத கருத்தின் தொடர்ச்சியாக இருக்கு வேதம், காண்டம்-48, மண்டலம்-31, நாள் உரைக்கோவை வாசக மலர்-43இல்; “அருளுலக வாரிசாக, வித்தாக, சத்தாக, சொத்தாக, மூலவராக, தலைவராக, ஆச்சாரியாராக, குருபீடமாக, நாயகமாக, காவலராக தேர்ந்தெடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இளமுறியாக் கண்டத்தின் மக்களின் பாதுகாவலராக தயாரிக்கப் பட்டிட்ட தமிழர்கள் என்றென்றைக்கும் (1) ஞானிகளாக, (2) அகஞானிகளாக, (3) புறஞானிகளாக, (4) மெய்ஞ்ஞானிகளாக வாழ்ந்தால் போதும். எக்காரணம் பற்றியும் விஞ்ஞானிகளாக வாழ முற்பட வேண்டாம்! முற்பட வேண்டாம்! முற்பட வேண்டாம்! முற்படவே வேண்டாம்!” என்று அழுத்தம் திருத்தமாக விஞ்ஞானத்தைக் கண்டிக்கின்றது.

14. இப்படி ஆதிசிவனார் விஞ்ஞானத்தைக் கண்டிப்பதனால்; இருக்கு வேதம் விஞ்ஞானத்துக்கு விரோதமானது என்று யாரும் கருதத் தேவையில்லை. இதே ஆதிசிவனாரே இருக்கு வேதம், விஞ்ஞானத்துக்கு விரோதமானது என்று யாரும் கருதத் தேவையில்லை. இதே ஆதிசிவனாரே இருக்கு வேதம் காண்டம்-10, மண்டலம்-23, நாள் உரைக்கோவை வாசகம்-35இல், “ஒவ்வொரு மனிதனும் மனித வாழ்க்கைக்குத் தேவையான அளவு விஞ்ஞானக் கருத்துக்களை, விஞ்ஞான முடிவுகளை, விஞ்ஞானிகளின் சாதனைகளை, போதனைகளைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேற முற்பட்டேயாக வேண்டும். ஆனால், விஞ்ஞானச் சாதனங்களால் மானுடன் சோம்பேறியாகவோ, பிறரை அடிமைப்படுத்தி சுரண்டுபவனாகவோ, பிறரின் உடைமைகளையும் பெருமைகளையும் சொந்தங்களையும் சொத்துக்களையும் ஆக்கிரமிப்பு செய்பவனாகவோ, நாசப்படுத்துபவனாகவோ மாறிவிடக் கூடாது! மாறிவிடக் கூடாது! மாறிவிடக் கூடாது! மாறிவிடவே கூடாது! அதாவது விஞ்ஞானம் என்பது எளிதில் கையாள முடியாதபடி இருபக்கமும் கூர்மையுள்ள கத்தி போன்றது ஆகும். அதுவும் கைப்பிடி இல்லாமல் இருக்கக் கூடிய கூர்மையான கத்தி போன்றது. இதை உணர்ந்து விஞ்ஞானக் கலையை, மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் ஆக்கப் பணிகளுக்கு மட்டும் பயன்படும் வண்ணம் வளர்க்க வேண்டும். இல்லையேல் விஞ்ஞானக் கலையே; ஞானம், அகஞானம், புறஞானம், மெய்ஞ்ஞானம் எனும் நான்கும் கட்டிக் காத்து வரும் மனிதப் பண்பாட்டின் நளினத்தையும், இனிமையையும், கனிவையும், அழகையும், அமைதியையும், பற்றுப் பாசங்களையும், உறவின் உரிமை பெருமைகளையும், மானுட நேயத்தையும், தன்னம்பிக்கையையும், உலகியல் மீது நம்பிக்கையையும், அமைதி, அன்பு, அறம், பரிவு, ஈவு, இரக்கம், அடைக்கலமளித்தல், பிறருக்கு உதவுதல், பிறரோடு கூடி வாழல், ... முதலிய இன்ன பிறவற்றையும் நோயுற்று நலிந்து மெலிந்து நாசமடையச் செய்து விடும். அதாவது, சுருக்கமாகச் சொன்னால்

பேரழிவையே பெரும்பாலும் விளைவித்துத் தரக்கூடிய பண்பை பெற்றதுதான் விஞ்ஞானக் கலை" என்று மிகத் தெளிவாகக் குறிக்கப் பட்டிருக்கிறது.

15. அதாவது இந்துவேதம், இந்து வேத நூல்கள், இந்துமத நூல்கள்... முதலியவை யெல்லாம் கணக்கற்ற கோடி கோடி ஆண்டுகளாக அண்டபேரண்டங்களில் வாழ்ந்து வளர்ந்து கொண்டிருப்பவையாகும். எனவேதான், அண்டபேரண்டம் முழுதும் ஆளுகின்ற இருக்கு வேதம் [இருக்கு வேதம் = இருந்த வேதம் = இருக்கின்ற வேதம் = இருக்கப் போகின்ற வேதம்] எந்தக் கருத்தையும் எந்தச் செய்தியையும் சுருக்கமாகத் தெளிவாக ஒரே ஒரு சொற்றொடரில் சொல்லுவதும் உண்டு; நூற்றுக்கு மேற்பட்ட வரிகளில் அதாவது நூற்றுக்கு மேற்பட்ட சொற்றொடர்களின் விரித்து விவரிப்பதும் உண்டு. எனவேதான், ஆதிசிவனார் மூலம் இருக்கு வேதம் இளமுறியாக் கண்டத்தில் அருளுலகப் பயிற்சி முயற்சிகளுக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட திருவிடம் எனப்படும் மிகப் பெரிய தீவில்தான் முறையாகக் கற்பிக்கப்பட்டது. எனவேதான் இளமுறியாக் கண்டம் படிப்படியாகச் சிதைந்து கடலுக்குள் மூழ்கிய காலங்களில் எல்லாம் [இளமுறியாக் கண்டம் மூன்று முறை சிதைந்து கடலுக்குள் அமிழ்ந்து மூழ்கிப் போய்விட்டது] இது கடல்கோள் என்ற சொல்லால் இந்துவேதத்திலேயே குறிக்கப் படுகிறது.

16. அப்படிக் கடல்கோள்களால் இளமுறியாக் கண்டம் சிதைந்திட; அங்கிருந்த மக்கள் நாலாபக்கமும் புதிதாகத் தோன்றிய நிலப்பகுதிகளுக்குச் சென்று குடியேறினார்கள். அதாவது, இளமுறியாக் கண்டத்துத் தமிழர்கள்தான் உலகம் முழுவதும் சென்று இருக்கு வேதத்தின் அறிவியல்களையும், கலைகளையும், இயற்கையின் பேருண்மைகளையும் பரப்பினார்கள். இதனால்தான், உலகம் முழுதும் பரவியுள்ள மானுடப் பண்பாடு, நாகரீகம், அறிவியல், கலை, மொழி, சமுதாய இயல், அரசியல், குடும்பவியல், தனிமனித வாழ்வியல்... முதலியவை எல்லாம் பெரும்பாலும் இன்றைக்கும் தமிழகத்தில் வாழுகின்ற தமிழர்களுடைய மானுடப் பண்பாடு, நாகரீகம், அறிவியல், கலை, மொழி, சமுதாய இயல், அரசியல், குடும்பவியல், தனிமனித வாழ்வியல் முதலியவற்றோடு ஒத்துப் போகின்றவைகளாக; பிரதிபலிப்புக்களாக; மறுபதிப்புக்களாக; பிம்பங்களாக; ஒரே மாதிரியாக ... இருக்கின்றன! இருக்கின்றன! இருக்கின்றன!

17. அதாவது இன்றைக்கு உலகம் ஐந்து பெரிய கண்டங்களாக பிரிந்து இருந்தாலும்; இவைகள் அனைத்திலும் உள்ள மக்களிடையே மிகுதியான அளவு எல்லாத் துறைகளிலும் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் காணப்படுகின்றன. இதற்குரிய காரணம் இன்றைய வரலாற்றுப் பேராசிரியர்களுக்கும், வரலாற்று வல்லுநர்களுக்கும், புதைபொருள் ஆய்வாளர்களுக்கும், நிலவியல் ஆராய்ச்சியாளர்களுக்கும், மானுடவியல் ஆராய்ச்சியாளர்களுக்கும் ... புரியாத புதிராகவே இருக்கின்றன.

18. இப்புதிருக்கு விடை ஐந்து கண்டங்களிலும் வாழுகின்ற மானுடர்களுக்கு மூதாதையர்கள், முன்னோர்கள், இளமுறியாக் கண்டத்தில் வாழ்ந்த தமிழர்கள்தான், அதாவது, இளமுறியாக் கண்டம் எனப்படும் குமரிக் கண்டத்தில் வாழ்ந்த மானுடர்களுக்கு அண்டபேரண்டங்களிலிருந்து மானுடர்களைக் காப்பாற்ற அனுப்பப்பட்ட ஆதிசிவனாரும், அவரோடு வந்த 'விண்வெளி ஐம்பெரும் குழுவினரும்' [(1) பதினெண்சித்தர்கள், (2) பதினெட்டாம்படிக் கருப்புகள், (3) 48 வகைப்பட்ட கடவுள்கள், (4) 48 வகைப்பட்ட வழிபடு நிலையினர்கள், (5) 48 வகைப்பட்ட சித்தர்கள்] அவர்களுக்குத் துணையாக வந்தவர்களும் இளமுறியாக் கண்டத்து மக்களுக்கு தமிழ்மொழியைப் போதித்து, தமிழ்மொழியின் சாதனைகளையும், போதனைகளையும் பயிற்றுவித்துத் தமிழினத்தை உண்டாக்கினார்கள். அந்தத் தமிழர்களில் மிஞ்சியவர்கள்தான் இன்றைய தமிழ்நாட்டில் தமிழர்களாக இருக்கிறார்கள் என்ற பேருண்மைதான் உலக மக்களிடையே உள்ள ஒருமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் காரணம் ஆகும். எனவேதான், உலகம் முழுவதும் சனவரி மாதத்தை ஆண்டின் ஆரம்ப மாதமாக, முதல் மாதமாகக் கருதுகின்ற மரபு தமிழர்களுடைய மரபுதான். தமிழர்கள்தான்; இந்த நான்காவது யுகத்தில் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தைமாதம் [சனவரி மாதம்] முதல்மாதமாக ஆண்டின் துவக்க மாதமாக இருந்ததை மாற்றினார்கள்; அல்லது மாற்றிக் கொள்ளும்படிச் செய்யப்பட்டார்கள். அதாவது இந்துவேதப்படி தை மாதம்தான் ஆண்டின் துவக்க மாதம்; ஆண்டின் முதல்மாதம். ஆனால், இப்பொழுது

சித்திரை மாதம்தான் தமிழ்ப் புத்தாண்டின் துவக்க மாதமாக; முதல் மாதமாகக் கொண்டாடப் படுகின்றது. இதுபற்றி இக்கலியுகத்தில் 3001 முதல் 3250 முடிய செயல்பட்டிட்ட சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கரூரிலுள்ள பசுபதீசுவரர் ஆலயத்தை நிர்மாணித்த; 10வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் அவர்கள்தான்; தமது குருபாரம்பரிய நூலிலும், இலக்கிய பாரம்பரிய நூலிலும், அரச பாரம்பரிய நூலிலும் நேரடியாகத் **'தமிழரின் புத்தாண்டுத் துவக்கம் தை மாதமாகத்தான் இருந்தது'** என்பதையும்; காலப்போக்கில் சித்திரை மாதம் புத்தாண்டின் துவக்க மாதமாக, முதல் மாதமாக, ஆரம்ப மாதமாக மாற்றப் பட்டிட்டது என்பதையும் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். இவற்றின் சாரம்தான்; தை மாதத்தின் சிறப்புக்கள் என்ற கட்டுரையாக, சிறிய நூலாக வெளியிடப்படுகின்றது.

19. (அ) அண்ட பேரண்டங்களிலிருந்து இந்த உலகம் வெறும் தண்ணீரால் ஆன உருண்டையாக இருந்தது. அப்பொழுது தண்ணீருக்குள்ளிலிருந்து கற்பாறைகள், கல் பரவலாக உள்ள இந்துமாக்கடல் பகுதியில் கல் மலைகள் வெளிப்பட ஆரம்பித்த காலத்தில்தான்; அண்டபேரண்டங்களிலிருந்து மூலப் பதினெண்சித்தர்களும், மூலப் பதினெட்டாம்படிக் கருப்புக்களும் அவர்களது துணைவர்களும் இவ்வுலகுக்கு வந்து கற்பாறைகள் மேல் தங்கி தங்களுடைய ஆராய்ச்சிகளை நிகழ்த்தினர். அந்த நிகழ்ச்சி தை மாதத்தில்தான் நடந்தது. இதுபற்றி மிகத் தெளிவான செய்திகள், மனுநீதி நூல்களிலும், இந்து வேதத்திலும், இந்துவேத நூல்களிலும், இந்துமத நூல்களிலும், ஆதிசிவனாரின் குருபாரம்பரியத்திலும், இலக்கிய பாரம்பரியத்திலும், அரச பாரம்பரியத்திலும் இருக்கின்றன.

(ஆ) இம்மண்ணுலகில் வாழ்ந்த மணீசர்கள் (மண் + ஈசர்கள்= மண்ணின் தலைவர்கள்) விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த நிலைமையினை மாற்றி, அவர்களைப் பக்குவப்பட்ட மனதை உடைய மனிதர்களாக மாற்றிட அனாதிசிவன்களான மனுநீதியார்கள் இம்மண்ணுலகத்திற்கு வர ஆரம்பித்த காலம் தை மாதமேயாகும்.

(இ) ஆதிசிவனார் இம்மண்ணுலகுக்கு வந்த காலம் தை மாதமேயாகும்.

(ஈ) ஆதிசிவனார் இப்பாரில் (பார் = உலகம்) வாழ்ந்து கொண்டிருந்த (வதிந்து கொண்டிருந்த = வசித்துக் கொண்டு இருந்த) பெண்ணானை பார்வதியை (பார் + வதி = இவ்வுலகத்தைச் சேர்ந்த பெண்) மணந்து கொண்டது தை மாதத்தில்தான் (தைப்பூச நாளில்). அதுவும் தைப்பூச நாளன்று.

(உ) ஆதிசிவனுக்கும், பார்வதிக்கும் பிறந்த முருகன் தை மாதத்தில்தான்; தைப்பூச மீனில்தான், தைப்பூச யோகத்தில்தான் பிறந்தான்.

(ஊ) தைமாதத்தில்தான் திருப்பாற்கடல் கடையப்பட்டு இலக்குமியும், அமுதும், ஆலகால நஞ்சும் வெளிப்பட்டனர்.

(எ) தேவாசுரப் போர் தைமாதத்தில்தான் துவங்கியது. தொடர்ந்து பதினெட்டு ஆண்டுகள் மீண்டும் மீண்டும் இடைவெளி விட்டு தைமாதத்திலேயே நிகழ்ந்தது தேவாசுரப்போர். இந்தப் போர் முடிவுக்கு வந்ததும் தைமாதத்தில்தான்.

(ஏ) முருகன் தேவாசுரப் போரை நிகழ்த்திட அருட்படை (தேவர்களுடைய படை) சேனாதிபதியாகப் பொறுப்பு ஏற்றதும் தை மாதத்தில்தான்.

(ஐ) முருகன் தெய்வானையை மணந்ததும், வள்ளியை மணந்ததும் தை மாதத்தில், தைப்பூசத்தில்தான்.

(ஒ) ஆதிசிவனார், இளமுறியாக் கண்டம் எனும் குமரிக் கண்டத்தில் திருவிடம் என்ற தீவை தேர்ந்தெடுத்து இந்து வேதத்திற்காகவும், இந்து மதத்திற்காகவும், தமிழ்மொழிக்காகவும் செயல்படத் துவங்கியது தை மாதத்தில்தான்.

(ஓ) ஆதிசிவனார் திருவிடம் எனும் தீவில் தமிழ்மொழிக்காக மருதமரக் காடுகள் இருந்த பகுதியில் மதுரை மாநகரை உருவாக்கத் தொடங்கியதும்; இந்து நதிக் கரையில் இந்து வேதத்திற்காக 'அருட்பா' எனும் நகரை உருவாக்கத் துவங்கியதும் அதையடுத்து இந்துமதத்திற்காக 'மோகம்சிதரு' நகரை உருவாக்கத் தொடங்கியதும் தை மாதத்தில்தான். ஆனால், இம்மூன்றையும் குறிப்பிட்ட கால இடை வெளிக்குள்தான் அமைத்தார். அதாவது முதலில் முத்தமிழ்ச் சங்கம் நிறுவுவதற்காக மருதை

மாநகரை உண்டாக்கிஞர். அந்நகர் முழுமை பெற்றதும் அங்கு தை மாதத்தில்தான் முத்தமிழ் சங்கத்தைத் தோற்றுவித்தார். அதன் பிறகே அதாவது, முத்தமிழ்ச் சங்கம் தோற்றுவித்து அங்கு இளமுறியாக் கண்டத்து மக்கள் தமிழ்மொழியை நன்கு கற்றுக் கொண்டபிறகு [சுமார் எட்டு ஆண்டுகள் கழித்து] அங்கிருந்த இந்துநதிக் கரையில் இந்து வேதத்திற்காக அருட்பாநகர் என்ற ஒரு நகரை உருவாக்கிஞர். இந்த அருட்பா நகரில்தான் இந்துவேதங்கள் நான்கும், இந்துவேத நூல்கள் 392உம் (முந்நூற்றுத் தொண்ணூற்று இரண்டு), இந்துவேத சுலோகங்கள் எனப்படும் சூலகங்கள் 4,42,363உம் (நான்கு இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து முன்னூற்று அறுபத்தி எட்டு) கற்றுக் கொடுக்கப்பட்டன. இப்படி இந்து வேதாகம பாடசாலை அருட்பா நகரில் நான்காண்டுகள் (48 மாதங்கள்) தொடர்ந்து நடத்தப்பட்டு; முழுநிலவு **பருவ பூசைகள் 48** இந்துவேதாகம நெறிமுறைப்படி நிகழ்த்தப்பட்டிட்ட பிறகுதான் அருட்பா நகரை யொட்டியே (மோகம் சிதரு நகர்) மோகஞ்சிதரு நகர் உருவாக்கப்பட்டது.

(ஔ) இந்த மோகஞ்சிதரு நகர் இந்துமத நூல்கள் முப்பத்தாறையும் முறையாகக் கற்பிக்கும் பதினெண்சித்தர் பீடத்தைப் பெற்றிருந்தது. இதேபோல் அருட்பாநகர் இந்துவேதங்கள் நான்கையும், இந்துவேத நூல்களேயும், இந்துவேத சுலோகங்கள் எனப்படும் சூலகங்களேயும் கற்பிக்கின்ற பதினெண்சித்தர் மடத்தைப் பெற்றிருந்தது.

(ஃ) இப்படி மருதை மாநகரைத் தோற்றுவித்ததும், அங்கு முத்தமிழ் சங்கத்தைத் தோற்றுவித்ததும்; அருட்பா நகரைத் தோற்றுவித்ததும்; பதினெண்சித்தர் மடத்தைத் தோற்றுவித்ததும்; மோகஞ்சிதரு நகரைத் தோற்றுவித்ததும்; அங்கு பதினெண்சித்தர் பீடத்தைத் தோற்றுவித்ததும் ஆண்டின் முதல் மாதமான தை மாதத்தில்தான். ஆனுல் இவையெல்லாம் ஆதிசிவனுரால் தோற்றுவிக்கப் பட்டவை என்பதனுல் சிவராத்திரி அன்று அதாவது மாசி மாதத்தில் வரக்கூடிய மகா சிவராத்திரி அன்று அண்ட பேரண்டங்களிலிருந்து ஆண்டு தோறும் மூலப் பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் இம் மண்ணுலகுக்கு வந்து தங்குவது வழக்கமாகி விட்டது.

அதாவது மூலப் பதினெண்சித்தர்களும்; பதினெட்டாம்படிக் கருப்புக்களும் ஆண்டு தோறும் முத்தமிழ் சங்கம் தோற்றுவிக்கப் பட்டதையும், பதினெண்சித்தர் மடம் இந்து வேதத்திற்காகத் தோற்றுவிக்கப் பட்டதையும், பதினெண்சித்தர் பீடம் இந்துமதத்திற்காகத் தோற்றுவிக்கப் பட்டதையும் நினைவு கொண்டு தமிழிலக்கியங்கள், இந்துவேத பகுப்புகள் அல்லது பிரிவுகள், இந்துமத நிறுவன நிர்வாகக் கட்டமைப்புகள் முதலியவற்றை யெல்லாம் ஆய்வு செய்து தேவையான திருத்தங்களேச் செய்திடுவார்கள். இதைத்தான்,

"மகா சிவராத்திரியில் அண்ட பேரண்டங்களிலிருந்து சித்தர்கள் வருவார்கள்" என்றும்; "இந்துவேதம் அருளப்பட்டது அல்லது செம்மைப்படுத்தப் பட்டது சிவராத்திரியில்தான்" என்றும்; "மகா சிவராத்திரி அன்றுதான் இந்துமதம் அருளப்பட்டது அல்லது செம்மைப் படுத்தப்பட்டது" என்றும் வழக்காற்றுச் செய்திகள் தோன்றின. ஆனுல், உண்மையில் இந்து வேதத்தை, இந்து மதத்தை, முத்தமிழ் மொழியை ஆதிசிவனுர் அருளத் தொடங்கியது தை மாதத்தில்தான். ஆனுல் அது நிறைவு பெற்றது மாசி மாதம் மகாசிவராத்திரி அன்ருக [இருந்தது]. ... ... ...

*(கட்டுரை முழுதுமாகக் கிடைக்க வில்லை)*

# பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களின் அரசபாரம்பரியம்

***அரசபாரம்பரியத்தில் அரச குருமார்களின் வீழ்ச்சியும், மதங்களின் வீழ்ச்சியும், வட ஆரியர்களின் அரசியல் செல்வாக்குப் பெற்ற மறைமுக அந்தரங்க வழிமுறைகளும் விளக்கப் பட்டிருக்கின்றன.***

மெய்யான இந்துமதம் பொய்யான ஹிந்துமதம் என்று தலைப்பிட்டு தமிழர்களுடைய மெய்யான இந்துமதம் பதினெண்சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புகளாலும் வழங்கப்பட்டு மூன்று யுகங்களிலும், நான்காவது யுகத்திலும், முதல் இரண்டாயிரம் ஆண்டுகளிலும் சிறப்பாக

இருந்த வரலாற்றினையும், அதற்குப் பிறகு பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியரால் எப்படிச் சிறுகச் சிறுகச் சிதைக்கப்பட்டும், திருத்தப்பட்டும், புதியன புகுத்தப்பட்டும், வட ஆரிய வேத மதக் கருத்துக்களும், கதைகளும், கற்பனைகளும், மதச் சடங்குகளும், பிற சாத்திறச் சம்பிறதாயங்களும், சமய சமுதாய அரசியல் நீதிகளும், சட்டங்களும் மிகத் திறமையாக மெய்யான இந்துமதத்தோடு இரண்டறக் கலக்கப்பட்டன என்ற செய்திகளையும்; காலக் கணக்கீட்டு அடிப்படையிலும் உரிய பல மனிதர்களின் பெயர்களையும், இடங்களையும் குறிப்பிட்டு எழுதிக் கொடுத்துள்ளவர்தான் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள். இவருடைய காலம் கி.மு.150 முதல் கி.பி.100 வரை. இவர் இதுபோல் மெய்யான இந்துமதம் என்றும் பொய்யான ஹிந்துமதம் என்றும் வேறுபடுத்தி எழுதியதற்குக் காரணம்; இவர் காலத்தில்தான் தமிழர்களுடைய இந்துமதம் அன்னியரினால் மிகப் பெரிய நலிவுகளுக்கும் சீரழிவுகளுக்கும் உள்ளாகிட நேரிட்டது. தமிழர்களும் தங்களுடையது இந்துமதம் என்பதை மறந்து வட ஆரியர்களின் ஹிந்து மதத்தையே ஏற்று வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அதனால் தமிழர்களுக்கிடையே மொழிப்பற்றோ, இனப்பற்றோ, நாட்டுப்பற்றோ, ஒற்றுமையோ இல்லாமல் போய்விட்டது. எனவே, சமுதாய அளவிலும், அரசியல் அளவிலும், தமிழர்கள் தன்மான உணர்வோ, இனமான உணர்வோ, மொழி யுரிமை உணர்வோ, மொழிப் பெருமை உணர்வோ, பண்பாட்டு உணர்வோ, நாட்டுரிமை யுணர்வோ ... ...இல்லாதவர்களாகி பிறரிடம் அடிமைகளாகவும், கூலிகளாகவும், எடுபிடிகளாகவும், ஏவலாட்களாகவும், பணியாட்களாகவும் வாழுவதுதான் தங்களுடைய வாழ்க்கை என்ற உணர்வையே மிகுதியாகப் பெற்று விட்டார்கள். இவ்வளவு தமிழினத் தாழ்ச்சி நிலைகளையும், வீழ்ச்சி நிலைகளையும் **'தமிழிலக்கிய வழிப் புரட்சி'** மூலம் சரி செய்திட முடியும் என்று முடிவெடுத்தார் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதி யாற்றங்கரைக் கருவூரார் அவர்கள். அதனால்தான், அவர் மற்ற ஒன்பது பீடாதிபதிகளும் எழுதாத அளவிற்கு மிகமிக விரிவாகவும், தெளிவாகவும், காலக்கணக்கீட்டு அடிப்படை பெற்றதாகவும் உரிய நிகழ்ச்சிகளுக் குரியவர்களின் பெயர்களையும், இடங்களின் பெயர்களையும் முடிந்தவரை குறித்தும்; மொழி வரலாற்றையும், இலக்கிய வரலாற்றையும், மக்களின் அகபுற வாழ்வியல் வரலாறுகளையும், ஒட்டுமொத்தச் சமுதாய இயக்க அமைப்பு வரலாறுகளையும் ... **இலக்கிய பாரம்பரியம்** என்ற பெயரால் எழுதலானார். அதாவது, அவர் சமுதாய வழிப் புரட்சியைப் பெரிதும் விரும்பினார், முழுதும் நம்பினார். ஆனால், அவர் சற்றும் எதிர்பாராமல் வட ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் குழந்தைப் போக்கில் விளையாட்டுத் தனமாக இமயமலை வரை சென்று வெற்றிக் கொடி நாட்டி இமயத்தில் மீன், புலி, விற்கொடிச் சின்னங்களைப் பொறித்து திரும்புகையில் பால்வண்ண மேனிய, ஆடற் கலைவல்லுனர்களாகவும், அழகு மிக்கவர்களாகவும் இருந்த பிறமண்ணினர் எனப்படும் வட ஆரியர்களைப் பல்லாயிரக் கணக்கில் குடும்பம் குடும்பமாகக் கைதியாகப் பிடித்து வந்து பாண்டிய நாடு முழுவதும் அடிமைகளாகச் செயல்படச் செய்தான். அதற்காக வஞ்சந் தீர்த்துக் கொள்ள இமயமலையைச் சேர்ந்த பிராகிருத மொழி பேசும் களப்பிறர்கள் தரைவழியாகப் படையெடுத்து வருமாறும், கங்கை கடலோடு கலக்குமிடத்தில் வாழும் பாலிமொழி பேசும் கலப்பிறர்கள் கடல்வழியாகப் படையெடுத்து வருமாறு செய்தும், காசுமீர் முதல் கன்னியாகுமரி வரை பரவி இருந்த பிருமணர்கள் தமிழினத்திற்கும், நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் உயிர்நாடியான தமிழ்மொழியையும், தமிழ் இலக்கியங்களையும், தொன்று தொட்டுத் தமிழ்ச்சங்கம் வைத்துக் காத்து வந்த பாண்டிய நாட்டையும், அதன் தலைநகரமான மதுரையையும் படையெடுத்து வரச் செய்து திடீர்த் தாக்குதலாலும், அரசியல் புரட்சியாலும், அரசு மாற்றங்களாலும் பேரழிவுக்கு உள்ளாக்கினார்கள். தமிழ்ச்சங்கம் தொடர்பான அனைத்து வகையான மன்றங்கள், மண்டபங்கள், மாளிகைகள், கூட கோபுரங்கள், பள்ளிச் சாலைகள், நூலகக் கட்டிடங்கள், படியெடுப்போர் மாளிகைகள், புலவோர் இருக்கைகள், சங்கம் கூடிய பேரவை, தமிழ் மாணாக்கர் நிலையங்கள் .... முதலிய அனைத்தையும் இடித்துத் தரைமட்டமாக்கினார்கள். பெரியோர், ஆண், பெண், இளைஞர், சிறுஅர், முதியோர் என்று வேறுபாடின்றித் தமிழ் கற்றவர், கற்றுக் கொண்டிருந்தவர், தமிழில் ஆர்வமுடையோர், தமிழுக்கு ஆதரவு தந்தவர், முதுபெரும் சங்கப்

புலவர்கள் ... முதலிய இன்ன பிற அனைவரையுமே ஈவு இரக்கமின்றி கண்ட கண்ட இடங்களில் ஆங்காங்கே கண்டதுண்டமாக வெட்டிப் போட்டுக் குருதி வெள்ளத்தில் மிதக்க விட்டார்கள். அப்படி வெட்டிப் போடப் பட்டவர்கள் யாரும் பிழைத்து விடாதவண்ணம் நான்கு யுகங்களாக மதுரையில் சேர்த்து வைக்கப்பட்ட [சுமார் 43,71,000 வருடங்களாகச் சேர்த்து வைக்கப் பட்டிருந்த = கி.மு.முதலாம் நூற்றாண்டின் இறுதியில், கி.பி. முதலாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் = அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக} பழந்தமிழ் ஓலைச் சுவடிகளைக் கிழித்து எல்லாப் பிணங்களின் மீதும் தூவி நெருப்பு வைத்துக் கொளுத்தினார்கள். அந்த மாபெரும் அரசியல் நிகழ்ச்சியால் அதிர்ச்சி யடைந்த பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் அமராவதி யாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் கி.பி.72இல் [அவர் கலியுக ஆண்டுக் கணக்கில் எழுதி வைத்ததை சித்தர் ஏனம்பட்டியார் எனும் கண்டப்பக் கோட்டைக் கருவூறார் அவர்கள் ஆங்கில ஆண்டுக் கணக்கிற்கு இதனை மாற்றினார் என்பதால் ஆங்கிலக் கணக்கில் காலத்தைக் குறிக்கிறோம்]; சமுதாய வழிப் புரட்சியின் மீது தாம் கொண்டிருந்த கருத்தின் தோல்வியை ஒப்புக்கொண்டு; அரசியல் வழிப் புரட்சியும் சமுதாய வழிப் புரட்சியும், சமய வழிப் புரட்சியின் மூலம்தான் நடக்க வேண்டும் என்ற புதியதோர் தத்துவ முடிவிற்கு வந்தார். அதனையே அறிவிக்கவும் செய்தார். அதற்காகக் கடலுக்குள் மறைந்த குமரிக் கண்டத்தின் மிஞ்சிய பகுதியாக இருக்கும் தென்னிந்திய மக்களைச் சிறப்பாகவும் [விந்திய மலை முதல் தென் இலங்கை வரை கடலுக்குள் உள்ள நூற்றுக் கணக்கான தீவுகள் உட்பட] இமயம் முதல் விந்தியம் வரை உள்ள மக்களைப் பொதுவாகவும், அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களின் அமுதத் தமிழ்மொழிக்குரிய மெய்யான இந்துமதத்தைத் தெரிந்து கொள்ளும்படியும்; அந்த இந்துமதம் கூறும் சமய வரலாறுகளையும், கருத்துக்களையும், செய்திகளையும், போதனைகளையும், சாதனைகளையும் அநாதிக்காலம் தொட்டு மிகத் தெளிவாகவும் விரிவாகவும் முறையாகவும் 'தம்முடைய குருபாரம்பரியமாக[1] எழுதி முடித்தார். அதேபோல், இந்துமதத்திற்கென்று முதன்முதல் பஃறுளியாற்றங் கரையில் இருந்த தொன்மதுரை மாநகரில் அமைக்கப்பட்ட அருட்பேரரசான பாண்டியப் பேரரசு தொடங்கி 43,71,000 ஆண்டுகளான நான்குயுக அரசியல் வரலாற்றையும் அரசபாரம்பரியம்தான் இம்மண்ணுலகிலேயே மிகப்பெரிய சமய சமுதாய கலை இலக்கிய தொழில் அரசியல் முதலிய துறைகள் அனைத்தையும் அடக்கிய ஒரு மாபெரும் வரலாற்று நூல். இப்படி இவர் 'இலக்கிய பாரம்பரியம்' என்ற பெயரால் சமுதாய வரலாற்றையும் [The Social History of the Ancient Tamils from the Pre-historic age upto the 1st Century of A.D.] 'குருபாரம்பரியம்' என்ற பெயரால் மத வரலாற்றையும் [The Religious History of the Ancient Tamils from the Pre-historic age upto the 1st Century of A.D. - approximately the period of 43,71,000 years], 'அரச பாரம்பரியம்' என்ற பெயரால் தமிழினத்தின் அரசியல் வரலாற்றையும் [The Political History of the Ancient Tamils from the Pre-historic age upto the 1st century of A.D. - a period of 43,71,000 years approximately] எழுதி முடித்தார். இவற்றால்தான் தமிழினம் என்பது ஒரு தனியினம்; இந்தத் தமிழினமே இம்மண்ணுலகில் தோன்றிய முதல் இனம்; இந்தத் தமிழினமே இம்மண்ணுலகத்தின் அருளுலக மூலமாகவும், காவலாகவும் வாரிசாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் இனம்; இந்தத் தமிழினத்தில்தான் அநாதி காலம் தொட்டு [இம்மண்ணுலகில் மானுட இனம் தோன்றிய காலம் முதல்] வாழையடி வாழையாகத் தொடர்ந்து அருளூற்றுக்கள் என அருளாளர்கள் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். இந்த உலகம் உள்ளவரை இந்தத் தமிழினத்தில்தான் அருளாளர்கள் தோன்றிக் கொண்டே இருப்பார்கள்; இந்தத் தமிழினத்தால்தான் இம்மண்ணுலகில் பொதுவான உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை அமைக்க முடியும், உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும், உலக அருட்பேரரசை உருவாக்க முடியும். இந்தத் தமிழினத்தின் போதனைகளாலும், சாதனைகளாலும்தான் பொருளுலக அருளுலக இருள்களும், இன்னல்களும், இடர்ப்பாடுகளும், மாயைகளும் கோலோச்சி வருவது முழுமையாகத் தடுக்கப் பட்டிடும், அகற்றப் பட்டிடும், ... ... என்ற பேருண்மைகள் மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் நிலைநாட்டப் பட்டுள்ளன.

## அரசியலும் மதமும்:

இவருடைய அரச பாரம்பரியத்தில்தான், மதத்தலைவர்களும், மத குருமார்களும், அரச குருமார்களும் தங்கள் தங்களுடைய சுயநலங்களாலும், பேராசைகளாலும், பிடிவாதங்களாலும், குறுகிய கொள்கை வெறிகளாலும் மக்களுக்கு அரச நீதி கிடைக்காமல் செய்திட்டார்கள்; உரிய சந்தர்ப்பங்கள் ஏற்படும் போதெல்லாம் பெரிய அளவில் நீதியைக் குழி தோண்டிப் புதைத்திட்டார்கள்; தங்களுடைய மதச் செல்வாக்கை வைத்துக் கொண்டு அரச குடும்பங்களை ஆட்டிப் படைத்திட்டார்கள்; சாதிவேறுபாடுகளையும் வெறிகளையும் விருப்பம் போல் வளர்த்திட்டார்கள், வெறியாட்டம் ஆட விட்டார்கள். இவர்கள், தனிப்பட்ட செல்வாக்கின் காரணமாக அரசர்களையே கூட மாற்றவும், அரசாங்கங்களையே கூட கவிழ்க்கவும் செய்திட்டார்கள். அதன் விளைவாகவே மதத்திற்குக் கட்டுப்பட்டிருந்த அரசு; தன்னை வலிமைப் படுத்திக்கொண்டு மதத்தைத் தனக்கு அடங்கிய ஒன்ருக ஆக்கிக் கொண்டு விட்டது. அதனுல், அரசர்களின் ஏதேச்சாதிகாரம் வலுப்பட்டு போர்வெறியும், முதலாளி தொழிலாளி என்ற ஏற்றத் தாழ்வு மிகுதியாகியும், பொருள்களையும் உயிருள்ள மக்களையும் தங்கள் விருப்பம் போல் அரசர்கள் கையாளக் கூடிய ஆபத்தான அநாகரீக ஆட்சி நிலையும் உண்டாகி விட்டன. அதற்காகத்தான் தமிழகத்தைப் பொறுத்த வரையில், இந்துமதத்தைப் பொறுத்த வரையில், அரசன் கோயிலுக்கும், அரசகுருவுக்கும், மத ஆச்சாரியார்களுக்கும், மடாலயங்களுக்கும், திருச்சபைகளுக்கும், அருளாளர்களுக்கும் கட்டுப்பட்டவனுக இருக்க வேண்டும் என்ற நியதியும் நீதியும் உருவாக்கப் பட்டன. ஆனுல், பொய்யான ஹிந்துமதத்தைத் தோற்றுவித்த பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் மிகவும் துணிச்சலோடு சூழ்ச்சியாகத் தங்களுடைய சமசுக்கிருத மொழியையே அருளுலக ஆட்சிமொழியாக மாற்றிஞர்கள். அதனுல், அவர்கள் மிக எளிதாக அரச குருவாக, குருபீடங்களாக, ஆச்சாரியார்களாக, மடாலய அதிபதிகளாக, திருச்சபைத் தலைவர்களாக, கோயில் குருக்கள்களாக; தங்களுடைய புராண இதிகாசக் கற்பனை கதாநாயகர்களை மட்டுமே அருளாளர்களாக அனைவரும் நம்பும்படிச் செய்து விட்டார்கள். அதனுல், அவர்கள் மிக எளிதில் காடுகளில் ஆங்காங்கே வாழ்ந்திட்ட தங்களுடைய பிருமணச் சாத்திரியார்களையும், ஆச்சாரியார் - களையும் மிகப் பெரிய மகான்களாகவும், ஞானிகளாகவும், தவசிகளாகவும் விளம்பரப் படுத்தி அரசகுடும்பத்தவர்கள் அடிக்கடி இவர்களைத் தேடிச் சென்று அறிவுரை உலகியலாகப் பெறுமாறு செய்து; ஒருவாறு அரச குடும்பத்திற்குச் சமமான உலகியல் மரியாதை உடையவர்களாகக் காட்டிலுள்ள பிருமணக் குடும்பங்களை மாற்றிஞர்கள். அதனுல், காட்டிலிருந்த பிருமணக் குடும்பத்துப் பெண்கள் காலப்போக்கில் காதல் திருமணம், கந்தருவத் திருமணம்... முதலியவற்றின் பெயரால் அரசனுடைய அந்தப்புரங்களிலும், உயர்ந்த அரசியலதிகாரிகளின் மாளிகைகளிலும் இடம் பெறலானுர்கள். அப்புதிய அரசியல் செல்வாக்கால் மெய்யான இந்துமதம் ஆட்சி செய்து கொண்டிருந்த எல்லாவகையான கோயில்களுக்குள்ளும் மதச் சாத்திறச் சம்பிறதாயச் சடங்குகளுக்குள்ளும் ஆட்சி செய்யத் தொடங்கியிருந்த பிருமணரின் பொய்யான ஹிந்துமதம் எனப்படும் வேதமதம் அரசியல் கொலு மண்டபங்களிலும், அரண்மனைகளிலும், அதிகாரிகளின் மாளிகைகளிலும், அதிகாரப் பூர்வமாக ஆதிக்கம் செலுத்தி வலுவான ஆட்சிநிலையைப் பெற்றது. அதனுல், விண்ணும் மண்ணும் ஆளும் மெய்யான இந்துமதமும் அண்ட பேரண்டமாளும் அருளுலக ஆட்சிமொழியான அமுதத் தமிழ்மொழியும் இம்மண்ணுலகின் அருட்துறைகளுக்கெல்லாம் மூலவர்களான பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், 48 வகைச் சித்தர்களும் வாழையடி வாழையாகத் தோன்றிடும் பத்தியாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள், முத்தியாளர்கள் எனப்படும் நால்வகையினர்களும் ஊழ்வினையால் ஆழ்வார்கள், சித்து விளையாடல்காரர்கள், சீவன்முத்தர்கள், ... முதலிய அருளாளர்களும், அருளூற்றுக்களான தமிழிலக்கியங்களும், அருள் வித்துக்களான தமிழ்ச் சித்தாந்தத் தத்துவக் கருத்துக்களும், அருளை அநுபவப் பொருளாக வழங்கவல்ல நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள், நவநாதங்கள், பதினெண் சித்தங்கள், 36 போதங்கள், 96 ஓதங்கள், நேம நியம நிடத நிட்டை நீதிகள், சுருதி ஆரண ஆகம மீமாம்சைகள், அத்திறச் சாத்திறச் சூத்திறத் தோத்திற நேத்திற வேத்திறங்கள், ... ஐந்தீ வேட்டல் முறைகள், முத்தீ ஓம்பல் முறைகள்,

பூசைமுறைகள், தவமுறைகள், ஞானமுறைகள், ... மந்தர மந்திர மந்திற மாந்தர மாந்தரீகங்கள், தந்தர தந்திர தந்திற தாந்தர தாந்தரீகங்கள், எந்தர எந்திர எந்திற ஏந்தர ஏந்தரீகங்கள், ... முதலிய அனைத்துமே மக்களுக்குப் புரியாதவைகளாக, அச்சத்திற்குரிய அற்புத மாயா வித்தைகளாக, கற்பனைகளாக, பகற்கனவுகளாக, பழங்கதைகளாக மாற்றப்பட்டு விட்டன, மாற்றப்பட்டு விட்டன, மாற்றப்பட்டு விட்டன, இந்தப் பிறமண்ணினரான பிரும்மணர் எனும் வட ஆரியரால். எனவே, பாண்டியப் பேரரசு போல் மீண்டுமோர் அருட்பேரரசு தாள்வலியும், தோள்வலியும், வாள்வலியும் கொட்டித்தான் மெய்யான இந்துமத மறுமலர்ச்சிக்காக உருவாக்கப்பட வேண்டும், உருவாக்கப்பட வேண்டும், உருவாக்கப்பட வேண்டும். அதற்காகத் தமிழர்களைத் தயாரிப்பதற்காகவே அரச பாரம்பரியத்தின் இறுதிப் பகுதி, நிறைவுப் பகுதி பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிக்காக எழுதப்படுகிறது. அவர் என்றைக்கோ! தமிழின அருட்பேரரசு எப்போதோ? ... ... ...”

பின்குறிப்பு:- அதாவது மெய்யான இந்துமத மறுமலர்ச்சிக்காக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும்; இதன் கீழ் 48 நிறுவன நிருவாகங்களையும், மதுரையின் வீழ்ச்சியை அடுத்த 72 ஆண்டுகள் கழித்தே தோற்றுவிக்க நேரிட்டது என்பது போல்; அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களின் இந்துமதத்தின் பதினெண்சித்தர் பீடத்தின் பதினோராவது பீடாதிபதியாகப் பட்டமேற்று அண்டபேரண்ட அருளுலக அருட்பேரரசாக அமர்கிறவர்கள் தத்துவ நாயகங்களாக மட்டும் இருந்து விடாமல் அருளாட்சி நாயகங்களாகவும் இருந்து அருட்பேரரசு அமைக்க உலகியலாக அனைத்தையும் செய்ய வேண்டும் என்பதேயாகும். அதற்காகத்தான் குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரச பாரம்பரியம் எனும் மூன்றும் எம்மால் முறையாகவும் நிறைவாகவும் எழுதப்படுகின்றன. எனவே, இவற்றை யெல்லாம் படிக்கும் வாய்ப்பினைப் பெறக்கூடிய தங்களால் முடிந்தவரை சமய வழியாகவும், சமுதாய வழியாகவும், அருளாட்சி அமைக்க எல்லா வகையான செயல்நிலைகளையும் உருவாக்க வேண்டும் என்பதே கருவாணையாக, குருவாணையாக, தருவாணையாக, திருவாணையாக, அருளாணையாக, மருளாணையாக விடுக்கப் படுகிறது, விடுக்கப் படுகிறது, விடுக்கப் படுகிறது.

‘அருளுலகமே இருண்டாலும் வாழையடி வாழையாக அருளாளர்கள் உருவாகக் கூடிய தமிழர்களின் அகவாழ்வு இருண்டு விடக் கூடாது. அவர்களுக்குள் பிறக்கும் பேரொளி அண்டபேரண்டங்கள் அனைத்தையுமே பீடித்திருக்கும் அகண்டாகாரப் பேரிருளை அகற்றிடும்’ - என்ற பேருண்மையினை காலங்கள் தோறும் வாழும் தமிழர்களில் கணிசமானவர்களாவது உணருமாறு செய்ய வேண்டும், கணிசமானவர்களாவது உணருமாறு செய்ய வேண்டும், கணிசமானவர்களாவது உணருமாறு செய்ய வேண்டும். ... ...

... ... ***பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் அமராவதி யாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் அரசபாரம்பரிய வாசகம்.***

நிறைவு நாள்:- 12-11-1988 மாலை 6.30 மணி.

**(அடிக்குறிப்பு:)**

[1] இவருடைய குருபாரம்பரியத்தில்தான் முதன்முதலாக இம்மண்ணுலகு பற்றியும் பதினெண்சித்தர்கள் பற்றியும், இந்துமதம் பற்றியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழி பற்றியும் முறையான நிறைவான வரலாறு முதன்முதல் தொகுத்து எழுதப்படுகிறது. அதாவது மற்றவர்கள் எல்லாம் அவரவருடைய கால நிகழ்ச்சிகளை மட்டுமே எழுதியிருக்கிறார்கள். தாங்கள் எழுதிய நூல்களை மட்டுமே வெளியிட்டிருக்கிறார்கள்.

---

## அரிய சித்தர்நெறித் தத்துவங்கள்

“பிண்டத்திலிருப்பனவே அண்டத்திலுள்ளன;
அண்டத்திலுள்ளனவே பிண்டத்திலுள்ளன.”

“தன்னை உணர்ந்தவன் உலகையும்
அண்டத்தையும் உணர்வான்.”

“தன்னை வென்று உயர்பவன் உலகத்தையும்
அண்டத்தையும் வென்று என்றும் நின்று
நிலவிடுவான்.”

“தன்னையறிந்தவனே மண்ணையும் விண்ணையும்
அறிந்திடுவான்.”

“தன்னை வென்று உயர்பவர் மண்ணையும்
பொன்னாக்கிடுவர்.”

“தன்னையறியும் அறிவே மெய்யறிவு பின்னை
யறிவு பேயறிவு”

“தன்னையறிந்திட ஒரு தந்திறம் சொல்
வெண்ணிலவே
உன்னை என்றும் அழிவிலாது காத்திடுவேன்
வெண்ணிலவே.”

“தன்னைத்தான் அளந்து அறிந்து மிதந்தவன்
மண்ணையும் விண்ணையும் அளந்தறிந்து
மிதந்திடுவான்.”

## அருள் வாசகம்
## ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக் கவிதை

புத்தாண்டு ஆங்கிலேயருடையது; அவணியெல்லாம் விழாவாகிறது
எத்திசையோரும் ஏற்றுப் போற்றுவது போலவே போற்றுகிறோம்.
இத்திருநிலை தமிழ்ப் புத்தாண்டு பெற்றிடவே ஏற்போம் உறுதி
நினைத்தவர் வதைத்துத் துவைத்து அழித்திடத் தமிழினம்
இத்தரணியெலாம் கூலியாய் ஏமாளியாய் வேலியிலாப் பயிராய்
இனத்துரோகி விரோதி கங்காணிகளால் வாழ்வதைத் தடுப்போம்.
தன்னலப் போலிக்கூலித் தலைவர்களே தமிழின வீழ்ச்சி தாழ்ச்சி
என்றுணர்ந்தே கருவறை ஊழியரான பூசாறி, பட்டர், குருக்கள்
என்போரனைவரும் திரட்டி அருட்போரால் இருளகற்ற ஒளியேற்றப்
புத்தாண்டில் உறுதி பூண்போம் ஒத்துழைப்பீர் ஏந்து நல்குவீர்.

**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**இராசிவட்ட நிறைவுடையார், குருமகா சன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்**

**விளக்கம்:-** இந்தியாவிற்கு அன்னியமான ஆங்கிலேயர்களுடைய ஆண்டுக்கணக்கினைப் பின்பற்றி ஆண்டுப் பிறப்பை உலகத்தினர்போல் தமிழ் நாட்டில் பிறந்த நாமும் கொண்டாடுவது போல், தமிழர்களின் மெய்யான இந்துமத ஆண்டுக்கணக்கை மட்டுமே உலகம் முழுதும் பின்பற்றும் நிலையைக் கொண்டு வருவோம் என்று உறுதி கொள்வோமாக!

தமிழர்களின் மெய்யான இந்துமதம் பகுத்தறிவுப் பூர்வமானது; கண்மூடிப் பழக்கவழக்கங்களோ, மூடநம்பிக்கைகளோ இல்லாதது. இந்த மெய்யான இந்துமதத்தில் கற்பனைகளையும், மூடநம்பிக்கைகளையும், கண்மூடிப் பழக்கவழக்கங்களையும் புகுத்தி உருவாக்கப் பட்டதே சமசுகிருத மொழியில் வழங்கப்படும் பிருமணர்களின் பொய்யான ஹிந்துமதம்.



**BOOK-POST**

To

**If Undelivered please return to**
Forum of Siddharadiyaans
C/O Mr V.Muniraju
Survey No.34, Door No.345
Outer Ring Road, Bellandur Post
Bangalore East - 560103
Cell: 09972130609